## ***வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் தாதிய உத்தியோகத்தர் பதவிக்கான ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் - 2021***

*வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ்வரும் வைத்தியசாலைகளில் நிலவும் தாதிய உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்பும் தகுதியுடையவர்கள்* விண்ணப்பங்களை *15.02.2021* ஆம் திகதிக்கு முன்னர் ***"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"*** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

*01.* ***ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-***

- தாதிய உத்தியோகத்தர் கடமைகளை ஆற்றுவதற்கான உடல் உள ஆரோக்கியத்தை தகுதித் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத்திகதியில் 65 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- வட மாகாணத்தில் காணப்படும் தாதிய வெற்றிடங்களின் அடிப்படையில் நியமன அதிகாரியினால் பணிக்கப்படும் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
- அரச தாதிய சேவையில் கடமையாற்றி முறையாக ஓய்வு பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- தாதிய சேவையில் தாமாகவே பதவியை விட்டு விலகிய (V.O.P) அல்லது ஒழுக்காற்று காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெற்றவரல்லாதவராக இருத்தல் வேண்டும்.

02. சம்பளம்:-

சுகாதார அமைச்சின் 07/02/2018ம் திகதிய 01-56/2018ம் இலக்க சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

குறிப்பு:-

ஆளணி வெற்றிட விபரம் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் என்பனவற்றை **www.np.gov.lk** என்ற வடக்கு மாகாணசபையின் இணையத்தளம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

***சி.திருவாகரன்.***
***செயலாளர்,***
***மாகாண பொதுச் சேவைஆணைக்குழு,***
***வடக்கு மாகாணம்.***
***25.01.2021***